முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
**O.S No.170/2013**

**Witness PW 1**

பெயர்:பத்மினி

க/பெ.: வீரப்பன்

இன்று (20/03/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

நான் பிரமாண வாக்குமூலத்தை மற்ற வாதிகளுக்காகவும் சேர்ந்து தாக்கல் செய்தேன். 2வது வாதி ராணி பாண்டிச்சேரியில் இருக்கிறார். 4வது வாதி டெல்லயில் உள்ளார். பிரியா என்பவர் சென்னையில் உள்ளார். 4வது வாதிக்கு வழக்கு தாக்கல் செய்த போதே நிரந்தர விலாசம் டெல்லி ஆகும், அவரது கணவர் அங்கு பணிபுரிந்து வருகிறார். வாதி பிரியா வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் சென்னையில் நிரந்தர விலாசம் கொண்டு இருந்தார் என்றால் சரிதான். 3வது வாதி வெற்றிசெல்வி வழக்கு நிலுவையில் இருந்த போது காலமாகிவிட்டார். பொது சொத்தினை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துகள் நிலமாகவும், மனையாகவும் உள்ளது. 3வது வாதி வெற்றிசெல்வி எந்த தேதியில் காலமாகிவிட்டார் என்று தேதி எனக்கு தற்போது நியாபகம் இல்லை. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதில் நான் படித்து பார்த்தேன். வழக்குரை 4வது அயிட்ட சொத்தான புஞ்சை சர்வே எண்.131ல் கண்டுள்ள 0.90ல் 12 செண்ட் சொத்தை கடந்த 1952ம் ஆண்டு 06/11/1952ம் தேதியில் சிங்காரகவுண்டர் என்பவருக்கு எனது தந்தையார் கிரையம் செய்து கொடுத்து அந்த தேதியிலிருந்து சிங்கார கவுண்டர் அனுபவம் செய்து வருவதாக எதிருரை சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனது தந்தைக்கு தான் தெரியும். மேற்படி சொத்தை சிங்கார கவுண்டர் தான் தற்போது அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் அந்த சொத்தை பொறுத்து நான் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றாலும் அவ்வாறு இல்லை, எனது தாய்,

தந்தையர் இறந்தபிறகு உள்ள சொத்தை தான் வழக்கில் தாக்கல் செய்துள்ளோம். எனது அப்பா பெரியப்பாவிற்கு விற்ற சொத்தை பொறுத்து நான் வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை. புளியந்தோப்பிற்கு தெற்காக உள்ள சொத்து 2ம் பிரதிவாதியிடம் உள்ளது. எனது சகோதரி சந்திரா என்பவரின் கணவர் பெயர் சுப்புராயன். அவர் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே இறந்துவிட்டார்.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

(Sd/-C.R.Gowthaman)
Principal Subordinate Judge,
Villupuram.